**என்எஸ்பீ பண்ட் மெனேஜ்மென்ட் கம்பனி லிமிட்டட்- 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

ஏன்.எஸ்.பீ பண்ட் மெனேஜ்மென்ட் கம்பனி லிமிட்டட்டின் ''கம்பனி'' 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

கம்பனியின், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல்.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 அங்கீகரிக்கப்படாத வணிக நடவடிக்கை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 யூன் 17 ஆம் திகதி PED 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.8 ஆம் பந்தியின் பிரகாரம், மாதாந்த கொடுப்பனவு, அமர்வுக் கொடுப்பனவு | இச் சுற்றறிக்கைப் பற்றிய விபரம் எடுத்துரைக்கப்பட்ட பின்னர் 2019 ஆம் ஆண்டில் எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை. | நிறுவனமானது கண்டிப்பாக பொது முயற்சிகள் சுற்றறிக்கையை கடைப்பிடிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அல்லது இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய கொடுப்பனவுகள் உரிய அமைச்சின் செயளாலரின் சிபார்சுடனும் நிதி அமைச்சின் ஒப்புதலுடனும் தலைவர்களுக்கு செலுத்தப்படல் வேண்டும். இருப்பினும், என்.எஸ்.பி நிதி முகாமை நிறுவனத் தலைவருக்கு தொழிற்தேர்ச்சிக்கான கொடுப்பனவு (Professional allowance) ரூபா 53,195,450 தொகையானது 2015 ஜனவரி முதல் 2018 நவம்பர் காலப்பகுதிக்காக இச் சுற்றறிக்கைக்கு அமைவாக எவ்வித எழுத்து மூலமான முன் அனுமதியும் பெறாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br><br>என்.எஸ்.பி வங்கியின் தலைவரே ஒரு உத்தியோக பூர்வ அதிகாரத்தால் நிறுவனத்தின் தலைவராகவும் பதில் கடமையாற்றுகின்றார். | முக்கிய முகாமைத்துவ பணியாளர்களின் ஊதியக் கொள்கை தயாரிக்கப்பட்டு அது மனிதவள மற்றும் ஊதியக் குழு ((BHRRC) வுக்கும் என்.எஸ்.பி நிதி முகாமைத்துவ நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கும் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவையினால் 2016 ஆம் ஆண்டில் இலங்கை விமான சேவையை மறு சீரமைப்பதற்கான திட்டத்தின் முன்னனி முகாமையாளராக இந் நிறுவனம் நியமிக்கப்பட்டது. இது தொடர்பாக ரூபா.246,939,587 தொகை திறைசேரியிலிருந்து பெற வேண்டி இருந்ததுடன் அதில் ரூபா 88,939,587 தொகை நிலுவையாக 2019 ஆம் ஆண்டிறுதியில் காணப்பட்டது. | 2019.12.31 இல் நிறுவனம் ரூபா 158 மில்லியனைப் பல்வேறு கோரிக்கைகளை அமைச்சுக்கு சமர்ப்பித்ததன் பின்னர் பெற்றுக் கொண்டது. மேலும், நிறுவனம் 2020 பெப்ரவரியில் இந்த நிலுவையையை தீர்க்குமாறு கோரிக்கையை முன் வைத்துள்ளது. | நிறுவனம இந்த நிலுவையை தீர்ப்பதற்கான முறையான நடவடிக்கையை மேற்கொள்ளவும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வு ஆண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 515,409,392 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 35,500 தொகை ஆனதால் நிதி விளைவுகளில் 2019 ஆண்டில் ரூபா 515,373,892 அல்லது 1,451,757 சதவீத முன்னேற்றம் கணிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கான காரணம் சந்தை வட்டி விகிதங்களில் ஏற்பட்ட சாதகமான நகர்வே நிதிக் கருவிகளில் ஏறபட்ட நியாயமான பெறுமதி அதிகரிப்பாகும்.

## 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவு பொருட்களின் போக்கு பகுப்பாய்வு

இது சென்ற வருடத்துடன் ஒப்பீட்டளவில் நிறுவனத்தின் வட்டி வருமானம் ரூபா 183 மில்லியனால் அல்லது 14 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் முக்கிய காரணம் அதிக வட்டி தாங்கும் பத்திரங்களின் பெறுமதி உயர்வேயாகும். வட்டிச் செலவினம் ரூபா 129 மில்லியன் அல்லது 14 சதவீதம் அதிகரித்துள்ளதன் காரணம் நிறுவனத்தின் கடன்பெறல் பட்டியல் உயர்வடைந்தமையே. கட்டணம் அடிப்படையிலான வருமான நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டதே அறன்காவளர் நடவடிக்கைகளை முக்கியமாக முன்னேற்றியது. இதன் விளைவாக கட்டண வருமானம் 8 மில்லியன் அல்லது 17 சதவிகிதம் 2019 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது. சந்தை வட்டி விகிதத்தில் ஏற்பட்ட சாதகமான நகர்வே 2019 இல் நிறுவனத்தின் ரூபா 472 மில்லியன் இருந்த வணிக இலாபம் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 355 மில்லியன் வணிக நட்டத்தை காட்டியது. ஆளணி கிரயம் ரூபா 8 மில்லியனால் குறைவடைந்தமைக்கு காரணம் சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது தொழில்தேர்ச்சி கட்டணம் 2019 இல் கொடுப்பனவு செய்யப்படாமையே.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

சென்ற ஆண்டு மற்றும் துறைசார் விகிதங்களுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **விளக்கம்** | **துறை விகிதம்** | **வங்கி** 2019 | **வங்கி** 2018 |
|---|---|---|---|
| சராசரி சொத்து திருப்பம் (ROA) | 6 | 4.78 | 0.02 |
| சராசரி உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் (ROE) | 28.5 | 17 | 0.002 |
| இடர் நிறையளிக்கப்பட்ட போதுமான மூலதனம் | 27.6 | 27.88 | 24.65 |

(துறை சார் விகிதங்கள் மத்திய வங்கியின் வலைத்தலத்திலிருந்து பெறப்பட்டவை )

(i) கம்பனியின் இடர் நிறையளிக்கப்பட்ட மூலதனத்தின் போதுமான தன்மை விகிதம் துறைசார் விகிதத்திலும் உயர்வானதுடன் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் இது 3.23 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

(ii) நிறுவனத்தின் சராசரி சொத்து திருப்பம் (ROA) மற்றும் சராசரி உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் (ROE) என்பன முறையே 4.76 சதவீதம் மற்றும் 17 சதவீதத்தால் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

(iii) கம்பனியின் பிரதான மூலதனம் 2018 ஆம் ஆண்டில் ரூபா. 2,723 மில்லியனிலிருந்து 2019 இல் ரூபா. 3,337 மில்லியன் வரை 23 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. மேற்குறித்த மிகக்குறைந்த பிரதான மூலதனத் தேவைப்பாடு ரூபா. 1,000 மில்லியனாகக் காணப்பட்டது. முக்கிய மூலதனம் அதிகரிப்பதற்கான முக்கிய காரணம் வருமான ஒதுக்கம் ரூபா 386 மில்லியனால் மதிப்பாய்வாண்டில் அதிகரித்தமையே ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைத் தன்மை வாய்ந்த நடவடிக்கைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2018 நவம்பர் 2 ஆம் திகதி நடைபெற்ற இயக்குனர் குழு கூட்டத்தில் 2018 ஆம் ஆண்டுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு ரூபா 2,543,546 ஐ செலுத்த அனுமதி வழங்கியுள்ளது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டின் வரிக்கு பிந்திய இலாபம் ரூபா 35,500 மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடு செய்யாது 2019 நிதிக் கூற்றுக்களிலே மேற் கொள்ளப்பட்டுள்ளது. | வழமையாக நிறுவனமானது அதன் ஊழியர்களுக்கு அவர்களின் செயல்திறன் ஊக்குவிப்பு கொடுப்பனவு முறைமைக்கமையவே கொடுப்பனவு செய்கின்றது. இருப்பினும், நிறுவனமானது மனிதவள மற்றும் ஊதியக் குழுவிடம் (BHRRC) செயல்திறன் ஊக்குவிப்பு கொடுப்பனவை நிறுவனத்தின் செயல் திறன் அடிப்படையில் செலுத்துமாறு முன்மொழிந்திருந்தது. | நிறுவனத்தின் செயல்திறன் ஊக்குவிப்பு கொள்கை நிறுவனத்தின் மதிப்பீட்டாண்டின் இலாபத்துடன் இணங்க வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2003 யூன் 2 ஆம் திகதி PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.2 மற்றும் 9.3 பந்திகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட பணியாளாகளின் விபரம் உறுதிப்படுத்தப்படவில்லை. மற்றும் நிறுவனம் ஆட்சேர்ப்பு திட்டத்தினையும் கொண்டிருக்கவில்லை. | கருத்திற்கொள்ளப்பட்டது | நிறுவனமானது கண்டிப்பாக அனுமதிக்கப்பட்ட பணியாளாகளின் விபரத்தையும் ஆட்சேர்ப்புத்திட்டத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். |
| (ஆ) | என்.எஸ்.பி நிதி முகாமை நிறுவனத்திற்கு 2018 மார்ச் 2 ஆம் திகதி முதல் ஒப்பந்த அடிப்படையில் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தர் அன்றிலிருந்து என்.எஸ்.பி வங்கிக் கிளையொன்றிற்கு இணைக்கப்பட்டுள்ளனர். | குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் மீண்டும் என்.எஸ்.பி நிதி முகாமை நிறுவனத்தின் தலைமை காரியாலயத்திற்கே அழைக்கப்பட்டார். | நிறுவனத்தின் தேவைக்காக நியமிக்கப்பட்ட ஊழியர்களை நிறுவனம் திறம்பட பயன்படுத்த வேண்டும் |